# COVID-19 தடுப்பூசியை ஏன் எனது பிள்ளை பெற்றுக்கொள்ள வேண்டும்?

**COVID-19 ஆல் பிள்ளைகள் நோய்வாய்ப்படுவதைத் தடுப்பதற்குத் தடுப்பூசி உதவுகிறது.**
**COVID-19 இன் பரவலைக் குறைப்பதன் மூலம் தடுப்பூசி சமூகத்தைப் பாதுகாக்கிறது.**



## உண்மையிலேயே பிள்ளைகளுக்கு இப்போது COVID-19 தடுப்பூசி தேவையா?

ஆம். COVID-19 நோய்த்தொற்றின் ஆபத்து இன்னும் அதிகமாகவே உள்ளது. பிள்ளைகள் எவ்வளவு விரைவில் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்கிறார்களோ, அந்தளவுக்கு அதிகமாக அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள்.



## எனது 5-11 வயது பிள்ளைக்கு எந்த COVID தடுப்பூசி போடப்படும்?

கனடாவிலுள்ள 5-11 வயதுள்ள பிள்ளைகள் சிறிதளவான Pfizer-BioNtech தடுப்பூசியைப் பெறுவார்கள் (10 மைக்கிரோகிராம், பதின்மவயதினர் மற்றும் வளர்ந்தோரில் பயன்படுத்தப்படும் அளவின் மூன்றில் ஒரு பங்கு). சிறிய அளவுகள் பிள்ளைகளில் சிறப்பாக வேலை செய்கின்றன, ஏனெனில் வளர்ந்தோரில் இருப்பதைவிட வலுவான நோயெதிர்ப்புசக்தி அவர்களில் உள்ளது. அது அவர்களுக்கு இரண்டு தடவைகள் தேவைப்படும்.



## COVID-19 தடுப்பூசி பிள்ளைகளுக்குப் பாதுகாப்பானதா?

கிடைத்திருக்கும் மருத்துவ ஆதாரங்களை Health Canada, பல்வேறு விஞ்ஞானிகள் ஆய்வாளர்கள் ஆகியோர் கவனமாகப் பரிசீலித்துள்ளனர், அத்துடன் தடுப்பூசி பற்றி பெரிய பாதுகாப்புக் கரிசனைகள் எதுவும் அவர்களுக்கு இருக்கவில்லை. ஊசி போடும் இடத்தில் வலி, சோர்வு, உடல் வலி, தலைவலி, காய்ச்சல் மற்றும் குளிர்நடுக்கம் போன்ற ஏனைய தடுப்பூசிகளால் ஏற்படும் லேசான பக்கவிளைவுகளைப் போலவே COVID-19 தடுப்பூசியின் மிகப் பொதுவான பக்க விளைவுகளும் இருக்கின்றன. சில நாட்களுக்குப் பின்னர் இந்த பக்க விளைவுகள் குறைந்துவிடும்.

அரிதான சந்தர்ப்பங்களில், சில பதின்வயதினரிலும் இளையோரிலும் COVID-19 தடுப்பூசியைப் பெற்ற பிறகு இதயத் தசை வீக்கம் (myocarditis) அல்லது இதயத்திற்கு வெளியேயுள்ள மேலணி வீக்கம் (pericarditis) காணப்பட்டிருந்தது; பெரும்பாலானவை சில நாட்களில் சரியாகிவிட்டன. COVID-19 தடுப்பூசியைப் பெற்ற 5-11 வயதுடைய பிள்ளைகளுடனான ஆய்வுகளில், இதய அழற்சிச் சம்பவங்கள் எதுவும் காணப்படவில்லை. COVID ஆல் நோய்வாய்ப்படல், தடுப்பூசியைவிட மிக அதிகளவில் இதய வீக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்டிருக்கிறது.

***பிள்ளைகள் ஆரோக்கியமாக இருப்பதற்கு COVID-19 தடுப்பூசி உதவும், எனவே அவர்கள் பாடசாலைக்குத் தொடர்ந்து செல்லவும் அவர்களின் நண்பர்களுடன் நேரத்தை செலவிடவும் முடியும். முடிந்தளவு விரைவாக உங்களின் பிள்ளைக்கு தடுப்பூசி போடுங்கள்!***

*டிசம்பர் 3, 2021 நிலவரப்படி துல்லியமானது.*

{REFUGEE}613

TAIBU COMMUNITY HEALTH CENTRE

OCASI
Ontario Council of Agencies Serving Immigrants

WCH
WOMEN'S COLLEGE HOSPITAL
Healthcare | REVOLUTIONIZED

Funded by: Immigration, Refugees and Citizenship Canada

Financé par : Immigration, Réfugiés et Citoyenneté Canada